செ.வெ.எண். 469 நாள்: 09.09.2019

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.09.2019) பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.09.2019) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களிடம் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், தூய்மையாக வைத்திடவும் மற்றும் குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பொதுமக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ் கணவர் இறப்பிற்காக திரு.பாலசுந்தரம் (லேட்) என்பவரின் மணைவி திருமதி.சண்முகசுந்தரி அவர்களுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில் காசோலையும், தாயார் இறப்பிற்காக திருமதி.சந்தனமாரி அவர்களுக்கு ரூ.1 இலட்சம் மதிப்பில் காசோலையும், கணவர் இறப்பிற்காக திரு.சுரேஷ்ராஜா என்பவரின் மணைவி திருமதி.தீபா அவர்களுக்கு ரூ.50 ஆயிரம் மதிப்பில் காசோலையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் இன்று வழங்கினார்.

5 நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மேலும் கடல் கடந்த இந்தியர் இழப்பீட்டுத் தொகையாக 3 நபர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் 5 இலட்சம் 72 ஆயிரம் காசோலைக்களை மாவட்ட ஆட்சியர் இன்று வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி சார் ஆட்சியர் மரு.மணீஸ் நாராணவரே, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சிவகுருபிரபாகரன் இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.செந்தில், உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**